# பாரதியார் கவிதைகள்



# அச்சமில்லை ! அச்சமில்லை !

அச்சமில்லை ! அச்சமில்லை ! அச்சம் என்பது இல்லையே.

இச்சகத்தில் உள்ளோர் எல்லாம் எதிர்த்து நின்ற போதினும்,

அச்சமில்லை ! அச்சமில்லை ! அச்சம் என்பது இல்லையே.

துச்சமாக எண்ணி நம்மை ஊறு செய்த போதினும்,

அச்சமில்லை ! அச்சமில்லை ! அச்சம் என்பது இல்லையே.

பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட போதினும்,

அச்சமில்லை! அச்சமில்லை! அச்சம் என்பது இல்லையே.

இச்சை கொண்ட பொருள் எல்லாம் இழந்து விட்ட போதினும்,

அச்சமில்லை! அச்சமில்லை! அச்சம் என்பது இல்லையே.

# அக்கினிக்குஞ்சு

அக்கினிக் குஞ்சு ஒன்று கண்டேன் - அதை

ஆங்கு ஒரு காட்டில் ஓர் பொந்தில் வைத்தேன்

வெந்து தணிந்தது காடு; தழல்

வீரத்தில் குஞ்சு என்றும் மூப்பென்றும் உண்டோ?

தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்.